கடற்கரையில் ஒரு காவிப் பிள்ளையார்

விழிப்பு வந்ததும் அன்று மலாட் போக வேண்டும் என்பது நினைவுக்கு வந்தது. இருநூற்றுப் பத்து எண் பேருந்தைப் பிடித்துப் போகலாம். ஆனால் அது இருதளப் பேருந்து. கொஞ்சம் மெள்ளப் போகும். ஊரைச் சுற்றிக்கொண்டு செல்லும். பத்து நிமிட தூரத்தில் வர்ஸோவாவின் காயல்புரம் போனால் படகைப் பிடித்து அக்கரையிலுள்ள மத்தீவிலிருந்து கிளம்பும் பேருந்தைப் பிடித்துப் பத்தே நிமிடங்களில் மலாட் போய்விடலாம். கடற்கரையைப் பார்த்தபடி காயல் வரை நடக்கும் கொசுறு சுகம் வேறு உண்டு.

முதலில் பாலில்லாத தேநீர் தயாரித்து இரு சொட்டு எலுமிச்சைத் துளிகள் விட்டுக் குடித்தவாறே, தேவையான காகிதங்களையும், புத்தகங்களையும் தோள் பையில் போட்டாள். குளித்துவிட்டு, தேன் நிறத்தில் பழுப்புக் கோடுகள் சிலந்தி வலை போல் பிரியும் பதிக் வேலை செய்த ஸல்வார்-கமீஸ் அணிந்து கொண்டு, நடப்பதற்கு வாகாகத் தோல் செருப்பைப் போட்டுக்கொண்டு, பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பினாள்.

கட்டடத்தை விட்டு வெளியே வந்ததும் தெருவைத் தாண்டி அந்தப் பக்கம் போனாள். காயல்புரத்தை நோக்கி நடக்கலானாள். இடது புறம் அடுக்கு மாடிக் கட்டடங்கள். அவற்றின் தோட்டங்களின் இடைவெளிகள், கார்கள் நிறுத்தும் பகுதியில் உள்ள பெரிய தூண்கள் இவற்றின் ஊடே துண்டு, துண்டாய்க் கடல் தெரிந்தது. மென்நீலமும், சாம்பலும் கலந்த நிறத்தில், காலை வேளை மஞ்சு இன்னும் சூழ்ந்திருக்க, கடல் புரண்டுகொண்டிருந்தது. நடக்கையில், ஒவ்வொரு முறை தெரியும் துண்டுக் கடலும் ஒரு தனி ஓவியம் போல இருந்தது. கட்டடத்தின் விலாவிலிருந்து நீண்ட துணி உலர்த்தும் கொடி களிலிருந்து தொங்கிய துணிகள் ஒரு பக்கம் ஆட, வெள்ளைப் பட கொன்றின் மூக்கு இன்னொரு பக்கத்திலிருந்து நுழைந்தவாறிருக்கும் ஒரு துண்டுக் காட்சி. ஐந்தெட்டு நடந்த பிறகு பார்த்தால், பாசிப் பச்சை மாருதியும், சிவப்பு டாட்டா ஸியாராவும் முன்னணியில் இருக்க, சற்றுப் பின்னே, கட்டடத்தின்

கைப்பிடிச் சுவர்மேல், காலையிலேயே கீழே வர வேண்டும் என்று சண்டி செய்துக் கடலைப் பார்த்தபடி அமர்ந்திருக்கும், நீலக் கம்பளிக் குல்லாய் அணிந்த குழந்தையின் பின்புறமும், கீழே புல்வெளியில் அதன் தள்ளு வண்டியும், எதிரே நீலக் கீற்றாகக் கடலும் தெரியும் காட்சி. இன்னும் பத்தடி நடந்தால் சிவந்த பூக்கள் மலர்ந்த குல்மோஹர் மரங்களுடே தெரியும் கைப்பிடிச் சுவரில் ஓடிக் களைத்த கறுப்பு நாயொன்று இறைத்தவாறு பரப்பிப் படுத்திருக்க, பின்னால் பாய்மரம் விரித்த படகுகளின் அணிவகுப்பு. வெவ்வேறு தினங்களில் நடக்கும்போது வெவ்வேறு விதங்களில் தெரிந்து மனத்தில் உறைந்துபோகும் காட்சி கள். இதிலெல்லாம்தான் இந்த நடையின் சுகம்.

கடைசி இரு கட்டடங்களும் பத்து வருடங்களுக்கு முன் முளைத் தவை. அதற்கு முன்னால் அங்கே ஓர் ஓடு வேய்ந்த பெரிய பங்களா இருந்தது. சுற்றிலும் தென்னை மரங்கள். எப்போதாவது ஒரு மூலை யில் முணுக்முணுக்கென்று மங்கலாக ஒரு விளக்கு எரியும் பங்களா. பேய் பங்களா என்று அதற்குப் பெயர் வைத்து, பேய்க் கதைகள் சொல்லி, இந்தி சினிமா பாணியில், “வர்ஸோவா பங்களாவில் இரவு பதினோரு மணிக்குச் சந்திக்கலாம்'' என்று மீசையும், கன்னத்தில் கொட்டைப் பாக்களவு மச்சமும் உடைய, திடகாத்திரமான முரட்டுக் கள்ளக் கடத்தல்காரர்கள் பேசிக்கொள்ளும் வசனங்களை எழுதிய நாடகங்களைப் பகல் பொழுதில் இங்கு அரங்கேற்றம் செய்து, இங்குள்ள பலரின் பள்ளிப் பருவங்கள் கடந்திருந்தன.

கடைசி இரு கட்டடங்களைத் தாண்டியதும் காயல் பகுதியை எட்டும்வரை கரையும், கடலும் நீண்டு தெரியும். வெய்யில் காலங் களில் மூங்கில் கம்புகள் நடப்பட்டு, மீன்கள் தொங்கும் வெய்யிலில் உலர்ந்தபடி. கடல் பக்கம் தலையைத் திருப்பியபோது, முந்தைய நாள் பிள்ளையாரைத் தண்ணீரில் போடும் விஸர்ஜன் தினமாக இருந்தது என்பது நினைவுக்கு வந்தது. கடலில் அமிழ்த்தப்பட்டிருந்த எண் ணற்றப் பிள்ளையார் சிலைகள், அலைகள் மோதி, உடைந்தும், உடையாமலும், விரிந்தும், நசுங்கியும், குப்புறவும், மல்லாக்கவும், பக்கவாட்டிலும், கரையில் விழுந்து கிடந்தன. தலைகளும், மகுடங் களும், கால்களும், கைகளும், தும்பிக்கை படிந்த தொப்பைகளும் சிதறிக் கிடந்தன. போர் நடந்து முடிந்த ரணகளம் போல் இருந்தது கரை. அத்துடன் பூசைப் பூக்கள் திணிக்கப்பட்டு அமிழ்த்தப்பட்டிருந்த ப்ளாஸ்டிக் பைகளும் காற்றில் பறந்தபடி கரையெல்லாம். காலையி லும், மாலையிலும் கடற்கரையில் நெடுந்தூரம் ஓடிப் பயிற்சி எடுக்கும் கோலிச் (மீனவ) சிறுவர்கள் அவை காலில் இடறாதபடி ஓடிக் கொண்டிருந்தனர். சிலர் சில துண்டுகளைப் பொறுக்கி எடுத்து, சிறிது தூரம் கடலில் நீந்திப் போய் அமிழ்த்தி விட்டு வந்தனர்.

இது ஒவ்வொரு ஆண்டும் நடைபெறும் நிகழ்ச்சி. இதற்கு முன்பு சின்னக் களிமண் பிள்ளையார்களை கடலில் அமிழ்த்திவிட்டு வந்ததும் கரைந்துவிடும். “கணபதி பப்பா மோரியா, புடுசா வர்ஷி

லெளகரியா" (எங்கள் கணபதியே அடுத்த வருடம் சீக்கிரமே வா) என்று கத்திவிட்டு வந்து மறந்துவிடலாம். இப்போது மற்ற பல விஷயங்களைப் போல, பிள்ளையாரும் அரசியல் கட்சிகள் மற்றும் தனி நபர்களின் வலிமையின் நிரூபணம் மற்றும் பிரகடனமாகவும், பணமுள்ளவர்கள் கறுப்புப் பணத்தைச் செலவு செய்வதற்கு வாகான வராகவும், ஓலமிட்டுச் சிலர் வலியுறுத்தும் அடையாளச் சின்ன மாகவும் மாறிவிட்டார். அதற்கேற்ப அவர் உருவமும் மாறிவிட்டது. கம்பிகள் உள்ளே வளைக்கப்பட்ட, காகிதக் கூழால் செய்த பெரிய, பெரிய ஐந்தடி முதல் பதினைந்து இருபதடி சிலைகள். பல்வேறு வடிவங்களில் கணக்கின்றிச் செய்யப்பட்டன. தாமரைமேல் பிள்ளை யார், தும்பிக்கைகளில் மாலைகளை உயரப் பிடித்தபடி, இரு புறமும் யானைகள் நிற்கும் பிள்ளையார், சிவ பார்வதியுடன் பிள்ளையார், புல்லாங்குழலுடன் பிள்ளையார், நடனமாடும் பிள்ளையார் என்று கற்பனைக்கேற்றபடி பிள்ளையார். "கைத்தல நிறைகனி அப்பமோட வல்பொரி" பாட்டும், மூஞ்சூறும், மோதகமும் இணைந்த பிம்பங் களாய் மனத்தில் வரும் பிள்ளையாரையெல்லாம் துடைத்தெறிந்து விட்டு வந்த பிள்ளையார்கள் இவை. விஸர்ஜன் தினத்தன்று மாலையும், இரவும், நெடுக லாரிகளில் பல்வேறு பிள்ளையார் சிலைகள், சினிமாப் பாட்டு, நடனம், ஒட்டகங்கள், குதிரைகள் இவற்றுடன் ஊர்வலம் வந்து, பல்வேறு பகுதிகளில் விசைப் படகு களில் ஏற்றப்பட்டு, கடலில் அமிழ்த்தப்படும். மறுநாள், கரைய மறுத்த சிலைகள் உடைந்து சிதறிய ரணகளமாய்க் கரை.

முன்தினம் மாலையும் வழக்கமான ஊர்வலம் நடந்திருந்தது. "சோலி கே பீசே க்யா ஹை?" மற்றும் "ஜப்பி கோயி லட்கி தேகே..." என்று தொடங்கும் 'ஓலே ஓலே' பாடல் போன்ற பிரம்மச்சாரிக் கடவுளுக்கேற்ற பாடல்களின் ஓலங்களுடன் ஏகப்பட்ட கணபதிகள் லாரிகளில் போயிருந்தனர். கடைசியாக எப்போதும் வரும் அந்தக் காவி வண்ணப் பதினைந்து இருபதடிப் பிள்ளையார் இரவு பனிரெண்டு மணி வாக்கில் வரும். ஒரு பெரிய துணிக்கடைக்காரரின் தரப்பிலிருந்து, அவர் பகுதியிலிருந்த எல்லா வியாபாரிகளும் ஒருங் கிணைந்து ஏற்பாடு செய்யும் பிள்ளையார் வைபவச் சிலை. காவி வண்ண எண்ணெய்ப் பூச்சு செய்த சிலை. லாரியில் நேர்வாக்கில் வைக்கப்பட முடியாமல், பக்கவாட்டில் வைக்கப்பட்டபடி வரும் காவிப் பிள்ளையார். உட்கார்ந்த நிலையில் இருக்கும், அதிகப் படியான அலங்காரப் பூச்சுகள் இல்லாத இந்தக் காவி பிள்ளையார் தெரு வழியே செல்வது அநேகமாக விஸர்ஜன் முடிவடைவதற்கான அறிகுறியாக இருக்கும். படகில் ஏற்றி, நடுக்கடல்வரை சென்று அமிழ்த்திவிட்டு வருவார்கள். முந்தைய இரவு காவிப் பிள்ளையார் வர வெகு நேரமாகிவிட்டிருந்தது.

நடந்து போகையில் கரை நெடுகச் சிலைத் துண்டுகள் கண்ணில் பட்டன. வர்ஸோவா கிராமத்து நுழைவிடத்தில் மீன்கள் ஏற்றிச் செல்லும் லாரிகள் தயாராக நின்றன. கண்ணைத் துளைக்கும்

ஊதாவும், பழுத்த சிவப்பும், பச்சையும், மஞ்சளுமாய், பின்பகுதி இடுக்கில் இறுகச் செருகிய சேலைகளும், பிடிக்கும் ரவிக்கைகளுமாய், தலையை இறுக முடிந்து கொண்டை போட்டு, ஒற்றைப் பூவோ, பூச்சரமோ செருகிக்கொண்டு கோலிப் பெண்கள், ஐஸ் கட்டிகள் மேல் வைத்த மீன்கள் உள்ள கூடைகளை லாரிகளில் ஏற்றி, தாங்களும் ஏறிக்கொண்டிருந்தனர். வியாபாரத்துக்குப் போகும் வேகம்.

லாரிகளைத் தாண்டிப் போகும் போது ஒருத்தி இவளைப் பார்த்து, "லாரியில் ஏறுகிறாயா?" என்பது போல் கையைக் காட்டினாள் சிரித்தபடி. மீன் கூடைகளைச் சுட்டிக்காட்டி, மூக்கைப் பிடித்து நாற்றம் என்று சைகை செய்தாள் இவள். "ஆயிக..." என்று கூவி விட்டுச் சிரித்தனர் அதற்கு. ஒருத்தி பெரிய மீனை எடுத்து ஆட்டி, "உப்பு, பசுமஞ்சள், காரம் போட்டு ஊற வைத்து, தேங்காய், கசகசா வைத்து அரைத்த மசாலாவில் சமைத்துச் சாப்பிட்டுப் பார் தெரியும்" என்று சிரித்துக்கொண்டே கூவினாள் லாரி கிளம்பிப் போக ஆரம்பித்ததும்.

சற்று வேகமாக வீடுகளையும், சிறு கடைகளையும், மீன் காய்கறிச் சந்தையையும் தாண்டி, படகுகள் கிளம்பும் முனைக்குப் போனாள். கூட்டம் அதிகம் இல்லை. சில கிறித்துவக் கோலிக் குடும்பங்கள் அக்கரையில் மத்தீவிலுள்ள மாதா கோவிலுக்குப் போகப் பளிச்சிடும் உடைகளில் நின்றனர். ஓர் இளம் பெண்ணின் கையில் மஞ்சள் ஸாடீன் துணியில் பொதியப்பட்ட ஒரு சின்னஞ்சிறு குழந்தை இருந்தது. ஸாடீன் துணியில் குழந்தை அப்புறமும் இப்புறமும் திரும்பும்போது மீன்போல் வழுக்கியது. சிரித்துக்கொண்டே அதன் இளம் தாய் விழாதபடி பிடித்துக் கொண்டாள். ஏதாவது குடும்ப வைபவத்திற்காக மாதா கோவிலுக்குப் போகிறார்கள் போலும்.

"மரியம், மரியம்" என்று யாரோ அழைத்தார்கள்.

"ஜோஸப் கூப்பிடுகிறான்" என்றாள் ஒருத்தி.

மரியம் என்று அழைக்கப்பட்டவள் குரல் வந்த திக்கை நோக்கி நடந்தாள். ஓரிரு வினாடிகளில் எல்லோரும் அங்கே போயினர். இவளும் சென்று பார்த்தபோது, சற்றுத் தூரத்தே இடுக்காக இருந்த கரையில் காவிப் பிள்ளையார் மல்லாக்கக் கிடந்தார். உடலின் பல பகுதிகள் உடைந்து கம்பிகள் துருத்திக் கொண்டு நின்றன. முள்முடி என்றில்லாமல் உடம்பெல்லாம் முள் தரித்துக்கொண்டது போல் கிடந்தது சிலை. நேற்றிரவு ஆழ்கடல்வரை சென்று அமிழ்த்த வில்லை போலும். சுற்றிலும் சாமரம் வீசுவது போல் பறக்கும் ப்ளாஸ்டிக் பைகள்.

கசமுசவென்று சில நிமிடங்கள் பேசிய பின்னர், ஜோஸப்பும், மாதாகோவில் செல்வதற்காக நின்ற இன்னும் சில ஆண்களும் விசைப் படகைக் கிளப்பி, சிதைந்த காவிப் பிள்ளையாரை அதில் வைத்து, கடலுக்குள் விரைந்தனர். வெகு தூரம் போவது தெரிந்தது. காவி வண்ணம் கடலில் அமிழ்வது நிழல் மாதிரித் தெரிந்தது.

அவர்கள் திரும்பியதும், அக்கரை போகப் படகேறினர் எல்லோரும். ஜோஸப்பின் உடை நனைந்திருந்தது.

"என்ன ஜோஸப், நனைஞ்சுபோயிட்டியே" என்று யாரோ சொன்னார்கள்.

"என்ன செய்ய முடியும்? அதுவும் யாரோடோ சாமிதானே?" என்றான் ஜோஸப்.

ஒரு பத்து வயதுச் சிறுமி ஏதோ சொல்ல வருவதும், இவள் பக்கம் சைகை காட்டி, 'சொல்லாதே' என்று அவளை ஜாடை காட்டி அடக்குவதும் தெரிந்தது.

அவளை நோக்கி, "தும் போலா" (நீ சொல்லு) என்றாள்.

அந்தப் பெண் மடமடவென்று அவள்முன் வந்து நின்றுகொண்டு, தலையில் கட்டிய ரோஜா வண்ண ரிப்பன் காற்றில் பறக்க, கண்களை மலர்த்தித் தலையாட்டியபடி பேசினாள்.

"அந்த சாமிக்குள்ள இருக்குற கம்பி இல்ல கம்பி, அது மீனோட வாயைக் கிழிச்சிடும். வாயெல்லாம் ரத்தமா, வயிறெல்லாம் ரத்தமா வர மாதிரி மீனைக் கீறி விட்டுடும். அப்புறம் . . . அப்புறம் . . . அந்த பிளாஸ்டிக் பையைச் சாப்பிட்டா மீன் செத்துடும். தண்ணில மொதக்கும் . . ." மளமளவென்று சொல்லிவிட்டு நிறுத்தினாள்.

அவள் தோள்மேல் கை வைத்துத் தன் மேல் சாய்ந்து நிற்கும்படி இருத்திக்கொண்டு, ஜோஸப்பைப் பார்த்தபோது அவன் கடலை வெறித்தபடி இருந்தான். சிறுமி அவள் மேல் வாகாகச்சாய்ந்து கொண்டு நின்றாள்.

'தினமணி' பொங்கல் மலர், 1996